**தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின்(மேல்நிலைக்கல்வி)**

**செயல்முறைகள், சென்னை – 06.**

ந.க.எண்.31244/W3/S1/2022 நாள். 29.06.2022

பொருள்– பள்ளிக்கல்வி – அரசு மேல்நிலைப்பள்ளிகளில் கணினி அறிவியல் பாடத்திற்கான தனிக்கட்டணம் – 2022–2023 –ஆம் கல்வியாண்டிலிருந்து இரத்து செய்யப்பட்டது – தொடர்பாக.

பார்வை– அரசாணை (நிலை )எண்.114 பள்ளிக்கல்வித்[பக5(1)] துறை நாள்.27.06.2022

பார்வையிற் காண் அரசாணை நகல் இத்துடன் இணைத்து அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கு தகவலுக்காகவும் தக்க நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனுப்பலாகிறது.

இணைப்பு–
பார்வையிற் காண் அரசாணை

இணை இயக்குநர்
(மேல்நிலைக்கல்வி). 29/6/22

29/06/2022

பெறுநர்
அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்,
அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள்,

நகல்
இவ்வாணையரக அனைத்து பிரிவுகள்.

## சுருக்கம்

பள்ளிக் கல்வி – 2022-2023ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு – அரசு மேல்நிலை பள்ளிகளில் மேல்நிலை வகுப்புகளில் கணினி அறிவியல் பாடத்தை விருப்பப் பாடமாக பயிலும் மாணவர்களிடம் வசூலிக்கப்படும் தனிக் கட்டணம் ரூ.200/-ஐ இரத்து செய்தல் – ஆணை - வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித்[பக5(1)]துறை

அரசாணை (நிலை) எண். 114

நாள் 27.06.2022
(திருவள்ளுவராண்டு 2053,
சுப கிருது வருடம், ஆனி-13 )

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை(நிலை) எண்.286, பள்ளிக் கல்வித் துறை, நாள் 04.10.1999.
2. பள்ளிக்கல்வி ஆணையரின் கடித எண்.31244/ டபிள்யு3/ எஸ்1/2022, நாள் 09.05.2022.

------

ஆணை :-

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏனையவற்றுடன், கணினி பாடத்தை விருப்பப் பாடமாக பயிலும் மாணவர்/மாணவிகளிடமிருந்து கூடுதலாக ரூ.200/- (ரூபாய் இருநூறு) ஆண்டொன்றுக்கு தனிக் கட்டணமாக வசூலித்திட பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுமதியளித்து ஆணையிடப்பட்டுள்ளது.

2. 2022-2023ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:-

23. மேல்நிலை கணினிப் பிரிவு மாணவர்களுக்கு கட்டண விலக்கு :

"அரசு மேல்நிலை வகுப்புகளில் கணினி அறிவியல் பாடத்தை விருப்பப் பாடமாக பயிலும் மாணவர்களிடம் 2022-23ஆம் கல்வி ஆண்டிலிருந்து ரூ.200 தனிக் கட்டணமாக வசூலிக்கப்படுவது முழுமையாக இரத்து

(த.பி.பா)

செய்யப்படும். இதனால் ஆண்டுதோறும் 3 இலட்சம் மாணவர்கள் பயனடைவர். இதற்கென ஆகும் செலவினம் ரூ.6 கோடியை அரசே ஏற்கும்.”

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட பள்ளிக் கல்வி ஆணையர் தனது கடிதத்தில், தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு தரமான கல்வி வழங்குவதற்காகவும், மாணவர்களின் கல்வித் தரத்தினை உயர்த்துவதற்காகவும், மாணவர்களின் எதிர்கால நலன் கருதியும் அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது என தெரிவித்துள்ளார். மேலும், அரசுப்பள்ளியில் பயிலும் மாணவர்களின் சிறப்புக் கட்டணத்தை (Special fees) அரசே வழங்கி வருகிறது எனவும், அரசு மேல்நிலைப்பள்ளியில் கணினி பாடத்தை விருப்பப்பாடமாக எடுத்து பயிலும் மாணவர்கள் செலுத்தக்கூடிய தனிக்கட்டணம் ரூ.200/-ஐ தற்போது மாணவர்களின் பெற்றோர்கள் செலுத்தி வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளார். அரசுப் பள்ளிகளில் அதிக அளவில் கிராமப்புறங்களில் உள்ள பின்தங்கிய மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மாணவர்கள் பயின்று வருகிறார்கள் எனவும், அரசுப் பள்ளிகளில் 2019-2020 முதல் 2021-2022 வரையிலான கல்வியாண்டுகளில் மேல்நிலை வகுப்பில் கணினி பாடம் படித்த மாணவர்களின் விவரங்களை கீழ்க்கண்டவாறு பள்ளிக் கல்வி ஆணையர் தெரிவித்துள்ளார்:-

| வ. எண் | கல்வி ஆண்டு | 11ஆம் வகுப்பு | 12ஆம் வகுப்பு | மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | பெறப்பட்ட கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2019-2020 | 148449 | 148449 | 296898 | 5,93,79,600 |
| 2 | 2020-2021 | 153819 | 153819 | 307638 | 6,15,27,600 |
| 3 | 2021-2022 | 163662 | 163662 | 327324 | 6,54,64,800 |

எனவே, மேற்படி அறிவிப்பினை செயல்படுத்தும் பட்சத்தில் அரசுப் பள்ளிகளில் மேல்நிலை வகுப்பில் கணினி அறிவியலை விருப்பப்பாடமாக பயில மாணவர்கள் செலுத்தும் தனிக் கட்டணம் ரூ.200/-ஐ 2022-2023ஆம் கல்வியாண்டிலிருந்து இரத்து செய்வதன் வாயிலாக ஒவ்வொரு கல்வியாண்டும் சுமார் 3.5 இலட்சம் மாணவர்கள் பயனடைவர் எனத் தெரிவித்துள்ளார். எனவே, அரசுப் பள்ளிகளில் மேல்நிலை வகுப்புகளில் கணினி அறிவியல் பாடத்தினை விருப்பப்பாடமாக பயிலும் மாணவர்களிடம் வசூலிக்கப்படும் ரூ.200/- (ரூபாய் இருநூறு மட்டும்) தனிக் கட்டணத்தை

(த.பி.பா)

மாணவர்களின் நலன் கருதி 2022-2023ஆம் கல்வி ஆண்டு முதல் முழுமையாக இரத்து செய்து ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துருவினை ஏற்று, அரசு மேல்நிலைப் பள்ளிகளில் மேல்நிலை வகுப்புகளில் கணினி அறிவியல் பாடத்தினை விருப்பப்பாடமாக பயிலும் மாணவர்களிடம் வசூலிக்கப்படும் தனிக் கட்டணம் ரூ.200/- (ரூபாய் இருநூறு மட்டும்) மாணவர்களின் நலன் கருதி 2022-2023ஆம் கல்வி ஆண்டு முதல் முழுமையாக இரத்து செய்து அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.25286/ நிதி(கல்வி-II)த் துறை/2022, நாள் 30.05.2022இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**
பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை-6.
மாநிலக் கணக்காயர், சென்னை-18/35.
**நகல்**:
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை-9
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களின்
முதுநிலைத் தனிச்செயலர், சென்னை-9.
நிதி(கல்வி-II / வ.செ.பொது-I/II/வ.வ-I)த் துறை, சென்னை-9.
பள்ளிக் கல்வி (வ.செ.)த் துறை, சென்னை-9.
சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

27/6/22
அரசு சார்புச் செயலாளர்.
27/06/2022